# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்,

# திருவல்லிக்கேணி, சென்னை—5.

தொலைபேசி எண். 28442462, 28447042.

## ந.க.எண்.156/2014 அ3 நாள் 23.05.2014

## மறு பொது ஏலம் மற்றும் மறு டெண்டர் அறிவிப்பு.

சென்னை—5, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் 09.06.2014அன்று கீழ்க்கண்ட இனங்களுக்கு பசலி 1424க்கு மட்டும் (1.7.2014 முதல் 30.6.2015 முடிய) உரிமங்கள் பொது ஏலம்/டெண்டர் மூலமும், இவ்வாலய திருவாய்மொழி மண்டபத்தில் அறிவிப்பில் கண்ட டேவணித் தொகை மற்றும் பிற நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்து சமய அறநிலையத்துறை அலுவலர் முன்னிலையில் இத்துறையின் சட்ட விதிகளின்படி பகிரங்கமாக விடப்பட உள்ளது.

கீழ்க்கண்ட டெண்டர் இனங்கள் 09.06.2014 மாலை 02.00 மணி வரை சீலிட்ட டெண்டர்கள் வரவேற்கப்பட்டு, அன்றே மாலை 03.00 மணிக்கு டெண்டர் திறத்தல்.

| வ. எண். | டெண்டர் விபரம். | டெபாசிட் |
|---|---|---|
| 1 | சுகாதார பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் ஒப்பந்தப்படிவத்தின் விலை ரூ.100 | 50,000 |

கீழ்க்கண்ட பொது ஏல இனங்கள் 09.06.2014 அன்று மாலை 2.00 மணிக்குள் சீலிட்ட டெண்டர்கள் வரவேற்கப்பட்டு, அன்றே பிற்பகல் 03.00 மணியளவில் பொது ஏலம் மூலமும் நடைபெறும்.

| வ. எண். | பொது ஏல / டெண்டர் விபரம். | டெபாசிட் |
|---|---|---|
| 1 | முடி சேகரிக்கும் உரிமம் | 5,000 |

இவைகளின் நிபந்தனைகளை ஆலய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஒம். செ.சிவாஜி,
துணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்கார்.

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

மேலாளர்

<u>அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்,</u>
திருவல்லிக்கேணி, சென்னை—5.

<u>பசலி 1424க்கான முடி சேகரிக்கும் உரிமத்திற்குரிய</u>
<u>மறு டெண்டர்/மறு பொது ஏல அறிவிப்பு.</u>

<u>ந.க.எண்.156/2014 அ3 நாள் 22.05.2014</u>

சென்னை—5, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் முடி சேகரிக்கும் உரிமத்தினை பசலி 1424க்கு (1.7.2014 முதல் 30.6.2015 முடிய) சென்னை, இந்து சமய அறநிலையத்துறை அலுவலர் முன்னிலையில் இத்திருக்கோயில் திருவாய்மொழி மண்டபத்தில் ஆலய தக்கார்/துணை ஆணையர்/ செயல் அலுவலரால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, 09.06.2014 மாலை 2.00 மணி வரை சீலிட்ட டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன. அன்றே மாலை 3.00 மணியளவில் பொது ஏலம்/டெண்டர் விடப்பட உள்ளது.

<u>நிபந்தனைகள்.</u>

1. மேற்படி பொது ஏலம் காலம் பசலி 1424க்கு (1.7.2014 முதல் 30.6.2015 வரை) மட்டுமே ஆகும்.

2. ஏலம் கேட்க விரும்புவோர் முடி எடுக்க சேகரிக்க உரிமத்திற்கு ரூ.5000/— (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) டேவணித் தொகையாக அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை—5 என்ற பெயரில் வரைவோலையாக மட்டுமே செலுத்திய பின்னர் தான் பொது ஏலம்/டெண்டரில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவர். ரொக்கமாக தொகை பெறப்பட மாட்டாது.

3. மேற்படி டெண்டர் மற்றும் பொது ஏலத்தில் கலந்து கொள்வோர், மேற்படி டேவணித் தொகை ரூ.5000/—க்கு (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) தொகையினை அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை—5 என்ற பெயரில் எடுத்து, வெள்ளைத் தாளில் எண்ணாலும், எழுத்தாலும் தெளிவாக எழுதி இத்துடன் வரைவோலையை இணைத்து திருக்கோயில் அலுவலகத்தில் டெண்டர் சேகரிக்க வைக்கப்பட்டுள்ள பெட்டியில் 09.06.2014 மாலை 2.00 மணிக்குள் சேர்ப்பிக்க வேண்டும். வைப்புத் தொகைக்கான வரைவோலையினை ஜெராக்ஸ் நகலை பொது ஏலம்/டெண்டர் நடைபெறும் போது கையில் வைத்திருக்க வேண்டும்.

4. டெண்டர்தாரர்கள் முன்னிலையிலும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர் முன்னிலையிலும், 09.06.2014 மாலை சுமார் 3.00 மணியளவில் பொது ஏலம் முடிந்த பின்னர் டெண்டர் திறக்கப்பட்டு, டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை அல்லது பொது ஏலத்தில் உயர்ந்த கேள்வித் தொகை இதில் எது அதிக பட்சத் தொகையோ அதனை முடிவு செய்யப்படும்.

5. திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்கள் கண்டிப்பாக பொது ஏலம்/டெண்டரில் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6. உரிமத்தினை எடுத்தவர் அந்த உரிமத்தினை எக்காரணம் கொண்டும் உள் உரிமத்திற்கு விடக்கூடாது.

7. பொது ஏலம்/டெண்டர் முடிந்த பின்னர் முடிவு செய்யப்பட்ட தொகையினை ஏலம் முடிந்தவுடன் திருக்கோயில் அலுவலகத்தில் முழுமையாக செலுத்தி உரிய ரசீது பெற்றுக் கொண்ட பின்னர் தான் சம்மந்தப்பட்ட பொது ஏலம் பாத்யத்தினை அனுபவிக்க அனுமதிக்கப்படுவார். ஏலம் எடுத்தவர் நமது சொந்த செலவில் உரிய முச்சலிக்கா எழுதி, ஆலய வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. இந்த ஏலத்தினை மாற்றியமைக்கவோ, நிறுத்தி வைக்கவோ திருக்கோயில் துணை ஆணையர்/செயல் அலுவலருக்கு பூரண அதிகாரமுண்டு.

9. பொது ஏலம்/டெண்டர் முடிந்தபின், முடிவு செய்யப்பட்ட ஏலத் தொகை முழுவதையும் செலுத்தத் தவறினால், அவர்கள் கட்டியுள்ள டேவணித் தொகை மற்றும் பங்குத் தொகையினை திரும்பத் தரப்பட மாட்டாது. மறு ஏலம் கொண்டு வரும் பட்சத்தில் திருக்கோயிலுக்கு ஏதேனும் நஷ்டம் ஏற்படின் மேற்படியாரிடமிருந்து வசூலிக்கப்படும்.

10. மேற்படி பொது ஏலம்/டெண்டரினை திருக்கோயில் நிர்வாக நலன் கருதி, காரணம் ஏதும் கூறாமல் எந்த சமயத்திலும் நிறுத்தி வைக்கவோ, ரத்து செய்யவோ அல்லது மாற்றியமைக்கவோ, நிராகரிக்கவோ துணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்காருக்கு அதிகாரமுண்டு.

11. திருக்கோயிலுக்கு வரும் சேவார்த்திகளிடம் உரிமம் எடுத்தவர் முடி எடுக்கும் நபர் ஒன்றுக்கு ரூ.5/– கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

12. டெண்டர்/பொது ஏலம் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தின் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளின்படி நடத்தப்படும். இந்த விதிகளின்படி டெண்டர்/பொது ஏலம் திறப்பு முடிவு செய்வது அறநிலையத்துறை ஆணையரின் மறுப்பாணை அதிகாரத்திற்குட்பட்டது.

13. இதர நிபந்தனைகள் ஏதுமிருப்பின் ஏல தினத்தன்று ஏலத்தின் போது அறிவிக்கப்படும்.

ஒம்/– செ.சிவாஜி,
துணை ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ)

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

மேலாளர்